விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 9 ஜூலகம் 27 இதழ் 192
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 25-8-84

அன்னையர் கோரிக்கையின் எதிரொலி:

## கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பலர் விரைவில் விடுதலை

### யாழ். அரச அதிபரிடம் அமைச்சர் 'லலித்' உறுதி

[யாழ்ப்பாணம்[

அண்மையில் இராணுவத்தினரால் வல்வெட்டித்துறை, நெல்லியடிப் பகுதிகளில் கைது செய்யப்பட்ட சிறுவர்களையும் இளைஞர்களையும் விடுதலை செய்யுமாறு அன்னையர் முன்னணி ஊர்வலமாகச் சென்று யாழ். அரச அதிபர் திரு, எம். பஞ்சலிங்கத்தை நேற்று அவரது அலுவலகத்தில் சந்தித்து சமர்ப்பித்த விண்ணப்பத்தையடுத்து, அரச அதிபர் நேற்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியுடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டார்.

அன்னையரின் அவல நிலையை யாழ். அதிபர் அமைச்சருக்கு விளக்கிக் கூறினர். கைது செய்யப்பட்டவர்களில் சுற்றவாளிகளெனக் காணப்படுபவர்களை கூடியவிரைவில், அதாவது எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக விடுதலை செய்வதாக அமைச்சர் அத்துலத்முதலி யாழ். அரச அதிபரிடம் தெரிவித்தார்.

(8 ம் பக்கம் பார்க்க)

# யாழ். நகர வீதிகளில் நேற்று பிள்ளைகளை விடுவிக்கக் கோரி தாய்மார் நடத்திய ஊர்வலம்!

### அரச அதிபரிடம் மகஜர் கொடுத்தனர்

[அலுவலக நிருபர் ஏ. வி. மாணிக்கம்]

**சமீபத்தில் கைதான தமது பிள்ளைகளை விடுதலைசெய்யக் கோரி தாய்மார்கள் ஏராளமான சுலோகஅட்டைகளைத் தாங்கிக்கொண்டு அமைதியான நீண்ட ஊர்வலமொன்றை யாழ். நகர வீதிகளில் நேற்றுக் காலை நடத்தினர்கள்.**

ஊர்வலமாகச் சென்ற தாய்மார்களில் ஒரு பகுதியினர் யாழ். செயலகத்துள் சென்று யாழ். மாவட்ட பதில் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு எம் பஞ்சலிங்கத்தை அவரது பணிமனையில் வைத்துச் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

நேற்றுக் காலை 8-30மணிக்கு யாழ். மணிக்கூண்டுக் கோபுரத்திற்கு முன்னலிருந்து தாய்மாரின் ஊர்வலம் ஆரம்பமானது.

'அன்னையர் முன்னணி' இந்த ஊர்வலத்திற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தது.

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை உட்பட யாழ் மாவட்டத்திலுள்ள பெண்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு ஊர்வலம் ஆரம்பமாகும் இடத்தை வந்தடைந்தனர்.

வேம்படி வீதியூடாகப் புறப்பட்ட அன்னையர் ஊர்வலம், 1ம் குறுக்குத் தெருவுக்கூடாகச் சென்று பிரதான வீதியை அடைந்தது. தகிக்கும் வெயிலில் அன்னையர்கள் இளம் பெண்களுடன், வயோதிபத் தாய்மாரும் ஊர்வலத்தில் காணப்பட்டனர். சோகமே உருவாக, அடிமேல் அடி வைத்து அமைதியாக அன்னையர்கள் சென்றுகொண்டிருந்த காட்சி கண்கலங்கச்செய்தது. அன்னையர்கள் சிலர் கைகளில் செபமாலைகளை உருட்டியவாறு தியான சிந்தனையுடன் சென்றனர்.

'அன்னையர் முன்னணி' என்ற சுலோகம் மூன்று மொழிகளிலும் பொறிக்கப்பட்டு சுலோக அட்டையை இரு அன்னையர் தாங்கிக் கொண்டு முன்செல்ல மூன்று பேர் வீதம் அணி அணியாக-வீதி ஓரமாக-ஊர்வலமாகச் சென்றனர்.

ஊர்வலம் சென்றுகொண்டிருந்த வீதிகளின் இரு மருங்கிலும் சந்திகளிலும், வீட்டு வாசல்களிலும் ஏராளமானோர் குழுமி நின்று ஊர்வலத்தைப் பார்த்து உணர்ச்சி மேலீட்டினால் கண்ணீர் வடித்தனர்.

பிரதான வீதியூடாகச் சென்ற அன்னையர் ஊர்வலம் கண்டி வீதியால் திரும்பிய

(8ம் பக்கம் பார்க்க)

## 'அப்பாவிச் சிறுவர்களை விடுவியுங்கள்'

### அன்னையர் முன்னணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் வடபகுதியில் கைதுசெய்த இளைஞர்களையும், சிறுவர்களையும் விடுதலை செய்யக் கோரி யாழ். அரசாங்க அதிபரிடம் அன்னையர் முன்னணி நேற்று மகஜர் ஒன்றைக் கையளித்தது, ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்காக இம்மகஜரை கையளித்தனர்.

அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அண்மையில் தமிழ்ப் பிரதேசங்களில் காரணமின்றிக் கைது செய்யப்பட்ட சிறுவர்கள் இளைஞர்களின் அன்னையர்களாகிய நாம் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யக் கோருகின்றோம். வடபகுதியில் நடைபெறும் சம்பவங்களைச் சாட்டாக வைத்துக் கிராமங்கள் தோறும் அப்பாவிச் சிறுவர்களைக் கைது செய்து வைத்திருப்பது பெற்றோருக்குத் தாங்கொணுத் துயரையும் பீதியையும் ஏற்படுத்தி உள்ளது.

குறிப்பாக ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி காலை வல்வெட்டித்துறையில் இளம் ஆண்பிள்ளைகளை அடையாள அட்டைகளுடன் தம்மிடம் கொண்டுவந்து ஒப்படைக்குமாறு ஒலிபெருக்கி மூலம் பெற்றோரிடம் ஆயுதப்

(8ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர் சம்பளம்

## குருநகர் வங்கியில் வழங்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

குருநகரிலுள்ள தற்காலிக இலங்கை வங்கியில் நேற்று முன்தினம் ஆசிரியர்களுக்கான சம்பளம் வழங்கப்பட்டது மிகுதியானவர்களுக்கு நேற்றுச் சம்பளம் வழங்கப்பட்டது.

இன்றுவரை சம்பளத்தைப் பெருத பாடசாலை அதிபர்கள், எதிர்வரும் திங்கட்கிழமை பெற்றுக் கொள்ள ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கி கிளைகளில், ஒய்வூதியம் பெற்றுவந்தவர்கள் அக்கிளைகளுடன் தொடர்பு கொண்டு காசோலைகளை ஒப்படைத்தபின், குருநகர்வங்கிக்கிளையில் வந்து ஒய்வூதியத்தை பெறுவதற்கு எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

**குருநகர் வங்கிக்கிளை நேற்று காலை 9 மணிக்கு திறக்கப்பட்டு நண்பகல் 11 மணி வரை மட்டும் இயங்கின.** குருநகர் வங்கிக்கிளை இன்று சனிக்கிழமை திறக்கப்படமாட்டாது. (க)

"ஆயுதப் போராட்டத்தை கைவிட்டால்

## தமிழ்ப்பிரிவினைவாதிகளுக்கு பொது மன்னிப்பு

### ஜனதிபதி ஜே. ஆர். பேட்டி

(கொழும்பு)

"தமிழ்ப் பிரிவினைவாதிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டால் அவர்களுக்கு பொது மன்னிப்பு அளிக்கத் தயாராகவுள்ளேன்"

இவ்வாறு ஜனதிபதி திரு ஜே. ஆர்.ஜெயவர்த்தன 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில்;- மேலும் தெரிவிக்கையில் "இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதி யொருவரை தமிழ்ப் பிரிவினைவாதிகள் நடுநிலைமை நாடொன்றில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த முடியும்" என்று கூறினர். (வெ)

## முஸ்லிம் பெரியார் சேர். ரஸீக் பரீத் காலமானுர்

[கொழும்பு]

இலங்கையின் பிரபல முஸ்லிம் தலைவர் சேர் ரஸீக்பரீத் தமது 97வது வயதில் நற்று முன்தினமிரவு காலமானுர்.

இலங்கை அரசியலில் பெரும் பங்கு வகித்த சேர். ரஸீக் பரீத் பிரித்தானிய ஆட்சியின் போதும், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரும் பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

1930ம் ஆண்டு கொழும்பு மாநகரசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட இவர் 36ம் ஆண்டில் சட்டசபைக்குத் தெரிவானுர். இரண்டாம் உலக யுத்தக் குழுவிலும் இவர் அங்கம் பெற்றிருந்தார்.

1947ம் ஆண்டு செனட்சபைக்கு இவர் தெரிவானுர். 1952ம் ஆண்டில் கொழும்பு மத்திய தொகுதியிலிருந்து இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானுர். டாக்டர் தஹநாயக்காவின் குறுகியகால அரசாங்கத்தில் வர்த்தக அமைச்சராகவும் இவர் கடமையாற்றினுர்.

பாகிஸதானுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகராகவும் சேர். ரஸீக்பரீத் பணிபுரிந்தார். இன, மத வேறுபாடின்றி கல்வி, மத, கலாசார, பொருளாதாரத் துறைகளுக்கு இவர் சிறந்த சேவையாற்றியுள்ளார்.

இலங்கையில் இஸ்லாமிய

(8ம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் இன்று தேர்த் திருவிழா

### நிகழ்ச்சிகளில் சிறுமாற்றம்

[யாழ்ப்பாணம்]

இன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழா விமரிசையாக வழமைபோல் நடைபெறுகின்றது. என்ருலும், சுவாமி நிலைகுத் திரும்பியதும் வழமைக்கு மாருகச் சிறிது நேரத்திற்குள் வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளுவார். அர்ச்சனைகள் அங்கு நடைபெறும்.

இன்று காலை 7 மணிக்கு சுவாமி வெளியில் வருவார் 7.15 மணிக்கு தேரில் அமர்வார். 7 30 மணிக்கு தேர் புறப்படும். 8-30 மணிக்கு தேர் நிலைக்குத் திரும்பும் 9.30 மணிக்கு வசந்த மண்டபத்துக்குத் திரும்புவார். அடியார்கள் வசந்தமண்டபத்தில் அர்ச்சனைகளைச் செய்துகொள்ளவும்.

கடந்த வருடம் உள் வீதியிலேயே திருவிழாக்கள் நடைபெற்றதால் இவ்வருட நல்லூர்த் திருவிழாக்கள் பொதுவாகவும் தேர்த்திருவிழா சிறப்பாகவும் மக்கள் உள்ளத்தில் எழுச்சியை உண்டுபண்ணுவதை ஆலயச் சூழலில் நன்கு அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.

# விளம்பரம்

## விற்பனைக்கு

சண்டிலிப்பாய் மத்தியில் இருவீடுகள் கட்டக்கூடிய 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். புவனேந்திரன், சிங்கம் வளவு, கோட்ரேட், மல்லாகம். 1407

நல்லநிலையில் உள்ள Honda CD 185 82 சிறீ தொடரிலக்க மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. 6, சுப்பிரமணியம் அவன்யு, (வயிரவர் கோவில் வீதியூடாக), கொட்டடி. யாழ்ப்பாணம். 1423

புதிய நிலையில் உள்ள K. V 2022 20'' Sony T. V. றிமூட்கொன்ரோல். தொடர்பு:- கோணேஸ் வீடியோ சென்றர் 521/2 K. K. S ரோட் வண்ணார் பண்ணை. (1429)

கச்சேரி கிழக்கு, புகையிரத வீதியில் (கண்டி வீதி, புகையிரதகடவைக்கும், புங்கங்குளம புகையிரத நிலையத்துக்கும் இடையில்) கிணறுவசதியுடன் கூடிய மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சு. தருலிங்கம், 11/6, சந்தன மாதா கோவில் ஒழுங்கை, கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம். 1403

## தேவை

பெண்கள், சிறுவர், ஆடைகள் வெட்டித்தைப்பதில் அனுபவமுடைய பெண்கள்தேவை. 31-ம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும், Kleen Khut, 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1418

## வாடகைக்கு

சுண்டிக்குளி, கொழும்புத்துறை வீதியிலுள்ள 54/2ம் இலக்கத்தில் அமைந்துள்ள சகல வசதியுடன் கூடிய நான்கு அறைவீடு, வரும்படியுடன் வாடகைக்கு கொடுக்கப்படவுள்ளது. இன்று மேற்படி விலாசத்திலும், அதன்பின்பரந்தன் கெமிக்கல்ஸ், பரந்தனிலும், எம். பி. சிவநாதனுடன் தொடர்பு கொள்ளவும். 1402

## காணவில்லை

மருதனுமடம் வீட்டு விருந்தையில் இருந்து ஒரு (Facit) தட்டச்சு யந்திரம் களவுபோய் விட்டது. அறிந்து முத்தையா கடைக்கு அறிவிப்பவருக்கு சன்மானம் கொடுக்கப்படும். 1417

## தவறிவிட்டது

பரந்தனுக்கும், யாழ்ப்பாணத்துக்குமிடையே 'CD 185' ரகத்தைச்சேர்ந்த ஹொண்டா மோட்டார் சைக்கிளின் சைட்கவரும், உபகரணங்களை வைக்கும் பையும் தவறிவிழுந்துவிட்டன. இவற்றை கண்டெடுத்து வழங்குபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். விபரங்களுக்கு: பி. ஜெகதீஸ்வரன், 81, றக்கா ரோட், யாழ்ப்பாணம். 1424

## WANTED

Female English typist fluent in English with a minimum of two years experience. Apply on or before 3-9-84 to KLEEN KHUT 239, Power House Road, Jaffna. 1419

## Building Technological Institute

கட்டிடத் தொழில்நுட்பவியல் நிறுவனம்

(கட்டிடக்கலைஞர்களாலும் பொறியியலாளர்களாலும் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்)

136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ஆரம்பம்: 27–08–84 காலை 10–00 மணி

DIPLOMA IN DRAUGHTSMANSHIP.

(6 மாதப் பயிற்சி)

DIPLOMA IN QUANTITY SURVEYING PART II

(City Guilds London)

விரிவுரையாளர்கள்:- S. RATNESINGAM
G. RATNASINGAM.

★ தவிர்க்க முடியாத காரணத்தினால் 10-8-84ல் தொடங்கவிருந்த எமது பயிற்சிகள் 27-8-84 காலை 10மணிக்கு ஆரம்பிக்கப்படும். 1235

## ST. JOHN'S COLLEGE, JAFFNA AND CHUNDIKULI GIRLS' COLLEGE.

## ADMISSION—1985

1. Vacancies, ONLY in the following grades: St. John's College—Grades One, Six and Nine. Chundikuli Girls' College—Grades One and Six.
2. Children born between 1.2.79 and 31.1.80 only will be considered for admission to grade one. Birth certificates should be annexed along with the application.
3. Pupils to be considered for admission to grades six and nine should be below the age of twelve and fifteen respectively as on 31/1/85.
4. Apply before the 10th of September on forms available from the respective Schools from the 1st of September 1984.
5. Please send stamped addressed long envelope and postal order for Rs. 20/- per form.
6. Admission Test (for grades six and nine only) at 8-30 a. m. on Saturday the 13th October 1984.
7. A passport sized photograph certified by the Principal of the present School must be produced at the admission test.
8. Time table for the admission test will be issued along with the application form.
9. Scholarships available for deserving pupils.
10. Applicants will be informed of the results—no personal calls please.

1281 PRINCIPALS.

## நாவற்குழி ஸ்ரீ சித்திவிநாயகர் மகோற்சவம்

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 27ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

15 தினங்கள் இம் மகோற்சவம் இடம்பெறும். செப்டம்பர் 9ந் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்உற்சவமும், 10ந் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். [கி]

## யாழ்ப்பாண அக்கடமி

### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும்.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 3 9 - 84-ல் ஆரம்பமாகின்றன.

84/85-ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு எமக்கூடாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 65 மாணவர்களுக்கு மேலாக மருத்துவம், பல்லறுவை மருத்துவம், விலங்கு மருத்துவ விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம், எந்திரவியல், பௌதிக விஞ்ஞானம், சட்டம் ஆகிய பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது எமது திறமைக்குச் சான்றாகும்.

அதிபர்.

தொலைபேசி எண். 22617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 1283

## முதலிலே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

உரும்பிராய் என்னும் இடத்தைச் சேர்ந்த (திருமதி) எஸ்மிகுணமணி திருச்செல்வம் என்பவரினது மரணசாதனத்தினதும் எழுத்தாவணத்தினதும் விடயத்தில்
— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம்:இல: T/3824

இராஜசிங்கம்திருச்செல்வம், 'முத்து மாளிகை', உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
— மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலேபெயர் குறிப்பிட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படிநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டதெனவும் 1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 1ந் திகதியன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி.

ஒப்பம்
கு. குலசிங்கம்
பதிவாளர்.

1984ம்ஆண்டு ஆவணி மாதம் 1ந் திகதி.

1416

## காரியாலய சேவகன் (OFFICE PEON)

### பதவி வெற்றிடம்

எமது காரியாலயத்தில் வெற்றிடம் உள்ளதால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் 30-08-84ற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

வயது:- 18 — 25

கல்வித்தராதரம்:- குறைந்தது J. S. C.(8-ம் தரம்)

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி;

தலைவர்,
யாழ். மாவட்ட தனியார் (ஓம்நிபஸ்)
பேருந்து இயக்குனர் சங்கம்
காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.

[1426]

## விற்றுத்தீர்க்கும் ★ ★

## ★ ★ மலிவு விற்பனை

இப்பொழுது நடைபெறுகிறது

## பிரவுண்சன் ரேட் சென்ரர்

''கூட்டுறவுக் கட்டிடம்''

கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

1404

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

## கொழும்பு ஸ்ரூடியோ

## பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ் குறிப்பிட்டவைக்கு எமது அடுத்த வகுப்புகள் 1-9-84ல் ஆரம்பமாகும்

| | |
|---|---|
| ★ மோட்டார் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)<br>★ கொம்பியூட்டர் புரோகிராமிங் (COMPUTER PROGRAMMING)<br>★ படம்வரைதல்-பில்டர்ஸ் குவான்றிறிஸ் உட்பட (DRAFTS AN SHIP—INCLUSIVE OF BUILDERS QUANTITIES)<br>★ எலெக்ரோனிக்ஸ் (ELECTRONICS) | 6 மாதகால பகுதி நேர வகுப்பு |
| ★ கடைச்சல் இயந்திர இயக்குதல் (LATHE OPERATION)<br>★ றெவ்றிஜறேஷன் (REFRIGERATION) | 3 மாத கால பகுதி நேரம் |
| ★ நீர் குழாய் இணைப்பு (PLUMBING)<br>★ மின் இணைப்பு (ELECTRICAL WIRING) | 1 மாத பகுதி நேரம் |

★ காற்று சீராக்கல் உபகரணமும் றெவ்றிஜறேஷனும் AIRCONDITIONING AND REFRIGERATION)

(இது ஒருவருட முழுநேர வகுப்பும் பயிற்சியும்)

இவ் நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் மட்டும் 30-8-84க்கு முன் விண்ணப்பிக்கவும்.

ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேர் மாத்திரம் விண்ணப்பிக்கும் கிரமப்படி சேர்க்கப்படுவர். ஆகவே உடனே விண்ணப்பித்து ஏமாற்றத்தைத் தடுக்கவும்.

பதிவாளர்,
பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

★ தென்னுபிரிக்கப் பொதுத்தேர்தல்

# கறுப்பர்களின் சுதந்திர உணர்வை மழுங்கச்செய்கின்றது!

## அணிசேராத் தலைவி இந்திரா கருத்து

புதுடில்லி ஆக 24

''தென்னுபிரிக்க பொதுத் தேர்தல் போலியானது. இன ஒதுக்கல்களுக்கெதிராகப் போரிடும் தென்.ஆபிரிக்கக் கறுப்பர்களின் தூய்மையான சுதந்திர உணர்வை மழுங்கச் செய்வதே புதிய அரசியலமைப்பைக் கொண்ட இப் பொதுத் தேர்தலின் முக்கிய நோக்கமாகும் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

தென்னுபிரிக்காவில் அமுலுக்கு வந்துள்ள புதிய அரசியலமைப்புக்கமைய நடத்தப்பட்டுள்ள பொதுத் தேர்தலைக்கண்டித்தே திருமதி இந்திரா காந்தி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் இத்தேர்தல் தென்னுபிரிக்காவில் பெரும்பான்மையினரான கறுப்பின மக்களை பெரிதும் புறக்கணிப்பதாக இருக்கின்றது. அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் மூன்று சபைகள் பாராளுமன்றில் சேர்க்கப்பட்டுள்ளன ஆனுல் அவற்றின் மூலம்அவர்களுக்கு நியாமான உரிமைகள் எதுவும் வழங்கப்படவில்லை.

அணிசேராத் தலைவி என்ற முறையில் திருமதி காந்தி இப் பொதுத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி தென்னுபிரிக்காவில் உள்ள ஆசிய நாட்டவர்களையும் கேட்டிருந்தார்.

இதேவேளை கடந்த புதன்கிழமை நடைபெற்ற இப் பொதுத் தேர்தலில் தொழில்க் கட்சி 80 இடங்களில் 76 இடங்களைக் கைப்பற்றி பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது,

கறுப்பின, மற்றும் ஆசிய நாட்டவர்கள் இத்தேர்தலைப் பகிஷ்கரித்தபோதிலும் தென்னுபிரிக்க வெள்ளையர்கள் அனைவரும் வாக்களிப்பில் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வாக்களிப்பைக் குழப்பும் விதத்தில் சில வாக்குச் சாவடிகளுக்கு முன்னுல் கறுப்பினத்தவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். சில இடங்களில் வன்முறைகளும் நிகழ்ந்தன. பொலிஸார் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீதுதடியடி,கண்ணீர்ப் புகைப் பிரயோகம் என்பவற்றை மேற்கொண்டனர்.

தென்னுபிரிக்கப் புதிய அரசியல் அமைப்பை ஐக்கியநாடுகள் ஸ்தாபனமும் நிராகரித்தது. பொதுத் தேர்தலையும் கண்டித்திருந்தது குறிப்பிடத்தக்கது. [கி]

## குடியரசுக்கட்சி வேட்பாளர்களாக

# றீகன், புஷ் மீண்டும் தெரிவு!

டலாஸ், ஆக 24

அமெரிக்க ஜனுதிபதி திரு. றெனல்ட்றீகன் ஜனுதிபதிதேர்தலுக்கான குடியரசுக்கட்சி வேட்பாளராக மீண்டும்தெரிவு செய்யப்பட்டுள்ளார். இக்கட்சியின் உப ஜனுதிபதி வேட்பாளராக திரு ஜோர்ஜ் புஷ் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்விரு தெரிவுகளும் ஏகமனதாகவே நேற்று முன்தினம் டெக்ஸாஸ் மாநிலத்தின் டாலஸ் நகரில் இடம்பெற்றன.

திரு. றீகன், திரு. புஷ் ஆகியோர் தமது தெரிவையடுத்து குடியரசுக் கட்சி ஆதரவாளர்களுக்குத் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

ஆயுத பரிகரணப் பேச்சுக்களில் அமெரிக்காவின் இராணுவ பலத்தைவிட்டுக்கொடுக்காத நிலையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குடியரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரத் தொனிப்பொருளாக உள்ளது. (கி)

## மாவை அம்பாள் உற்சவம்

(மாவிட்டபுரம்]

மாவிட்டபுரம் வீணியவரை இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான அலங்கார உற்சவம் இம் மாதம் 30ம் திகதி ஆரம்பமாக உள்ளது.

இந்த உற்சவம் தொடர்ந்து 12 தினங்கள் இடம் பெற்று தீர்த்த விழாவுடன் நிறைவு

(7-ம் பக்கம் பார்க்க)

# —தமிழகச் செய்திகள்—

## 800 ஆண்டுகள் பழமையான இராமர் சிலை!

திருச்சி, ஆக. 24

திருச்சி மாவட்டத்தில் உள்ள கிராமமொன்றில் நான்கு அடி உயரமான இராமர் சிலையொன்று தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. இச்சிலை தலையில் கிரீடத்துடன் 'சுகாசன' நிலையில் இருக்கக் காணப்படுகின்றது.

இச்சிலை கி. பி. 11-ம், 12-ம் நூற்றுண்டைச் சேர்ந்த 800 ஆண்டுகள் பழமைவாய்ந்த சிலையாகும் என்று இதனைப் பரிசோதித்த புதைபொருள் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார். கருங்கல்லில் இது செதுக்கப்பட்டுள்ளது. (கி)

## ஆர்ப்பாட்ட ஊர்வலம்

சென்னை ஆக, 24

இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பொள்ளாச்சியில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நேற்றுமுன்தினம் நடத்தினர்.

இலங்கை அரசாங்கம் இலங்கைத் தமிழர்கள் மீதான அடக்குமுறைகளை நீடித்தால் இந்திய அரசாங்கம் அவர்களை பாதுகாக்க உடன்நடவக்கை ஒன்றை எடுக்கவேண்டும் என்று ஊர்வலத்தில் சென்றவர்கள் கோஷமெழுப்பினர்.

## அக்கறை

சென்னை ஆக, 24

''தமிழர் விடுதலைக் கூட்டயினருக்கு இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதில் அக்கறை இல்லை என்ற குற்றச்சாட்டை மறுக்கவே வட்டமேசை மகாநாட்டில் த. வி. கூ. கலந்து கொண்டது'' என்று அக்கட்சிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையில் தெரிவித்தார். திரு. அமிர்தலிங்கம் தற்போது சென்னை வந்துள்ளார், காந்தீய ரீதியில் சட்ட மறுப்புப் போராட்டங்களை இலங்கையில் நடத்தவும்தமது கட்சி ஆலோசித்து வருவதாக அவர் நிருபர்களிடம் கூறினுர்.

## வெடிகுண்டுப் புரளி

மதுரை, ஆக 24.

மதுரை சுங்கக்கட்டிடத்தில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாக நேற்றுத் தொலைபேசி எச்சரிக்கை ஒன்று விடுக்கப்பட்டது. இதையடுத்துப்பொலிசாரும், வெடிபொருள்நிபுணர்களும் இக்கட்டிடத்தைத் தீவிரமாகச் சோதனையிட்டனர் ஆனுல் அங்கு வெடிகுண்டுகள் எதுவும் கண்டுபிடிக்கப்படாததால் அத்தொலைபேசி எச்சரிக்கை ஒரு விஷமச் செயல் என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

## ஏற்றுமதி வலயம்

சென்னை ஆக, 24.

சென்னையில் 4 இடங்களில் ஏற்றுமதி வலயங்கள் நிறுவப்படவுள்ளன. இத்தகலலை மத்திய தொழில் அமைச்சர் திரு. வி. பி. சிங் தெரிவித்தார். நாளடைவில் இவ்வலயங்கள் தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று கூறினுர். (கி)

## ரூபவாஹினி

மாலை

5-30 சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)

5-45 'நியூஸ் பைடர் மான், (ஆங்கிலம்)

6-15 சிறுவர் நிகழ்ச்சி [சிங்களம்)

6-55 செய்திகள் (தமிழ்)

7-15 'ஜெமினி மேன்' (ஆங்கிலம்)

8-15 செய்திகள் (சிங்களம்)

8-35 நாடகம் (சிங்களம்)

9-05 இசை நிகழ்ச்சி [சிங்களம்)

9-30 செய்திகள் (ஆங்கிலம்)

9-50 'ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்' துப்பறியும் தொடர்ச் சித்திரம் மீண்டும் ஆரம்பம் (ஆங்கிலம்)

10-30 உலகச் செய்திகள்

10 35 ஸ்டாஸ்கி தொடர்ச்சி

10-50 நிகழ்ச்சிகள் முடிவு

# பழங்குடி மக்களுக்கு இந்திய லோகசபையில் பிரதிநிதித்துவம்!

புதுடில்லி ஆக 24

இந்தியாவின்மிசோரம்,மேகாலயா, நாகலாந்து, அருணுசலப் பிரதேஷ் போன்ற மாநிலங்களின் பழங்குடி மக்களுக்கும் இந்திய லோகசபையில் இடமளிக்கப்படும்.

பழங்குடி மக்களுக்கு லோகசபையில் பிரதிநிதித்துவம் வழங்கக்கோரும் பிரேரணை நேற்று லோகசபையில் கொண்டுவரப்பட்டது இப்பிரேரணைக்கு எதிராக எவரும் வாக்களிக்கவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட சகல பிரதிநிதிகளும் இப்பிரேரணையை ஆதரித்தனர். இதனையடுத்து 361 வாக்குகளால் இப்பிரேரணை சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதுதவிர நாகலாந்து,மேகாலயா மாநிலங்களின் சட்டசபைகளிலும், அம்மாநிலங்களின் பழங்குடி மக்களுக்குப் பிரதிநித்துவம் வழங்கும் விதத்தில் திருத்தமசோதா ஒன்று கொண்டுவரப்பட்டது. (கி)


குறெஸ் ட்ரவல் சேர்விசஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

உலகின் எப்பாகத்திற்குச் செல்ல வேண்டுமானுலும் உங்கள் பிரயாணச்சீட்டுக்களை யாழ். நகரிலேயே பதிவு செய்து கொள்வதற்கும், பிரான்ஸ், இத்தாலி, செல்வதற்கான விசா, பயணச் சீட்டுக்கள் மற்றும் சகல ஒழுங்குகளையும் மிகக் குறைந்த கட்டணத்தில் செய்து கொள்வதற்கும் உடன் நாடுங்கள்.

"குறெஸ் ட்ரவல் சேர்விசஸ்"

Cross International Telecommunication Services

CTS

உலகின் சகல பாகங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் நேரடித் தொலைத் தொடர்பு சேவையையும், ரெலெக்ஸ் (TELEX) சேவையையும் ஒரு நொடிப்பொழுதில் தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

Tele Phone No: 22040, 22065. Telex No: 22207 (C. T. S)CE

குறெஸ்ரெக்னிக்கல்சேவிஸ்



சகலவிதமான மின்சாரப் பொருட்கள், கைக்கடிகாரங்கள், சமையலறை உபகரணங்கள் உட்பட ஆடம்பரப்பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

STAGE No: 11, MODEL MARKET, No, 5: 1st FLOOR
BUS STAND CENTRE ROAD, JAFFNA.
Telephone: No: 22040, 22065.TELEX No. 22207 (C. T. S) C E



ICMA - A, B, P. I

பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருந்த மாணவர்கள் மேற்படி வகுப்புகளில் சேர்ந்து படிக்கலாம்.

★ முழுப்பாட நெறிக்குரிய பாடக்குறிப்புகளும் 17 பரீட்சை விஞத்தாள்களும் இலவசம்.

★ 1976-ம் ஆண்டு முதல் 1984 ம் ஆண்டு MAY வரைக்கும் நடந்த 17 பரீட்சைகளில் வந்த விஞக்களும் முழுமையாக இந்த வகுப்புகளில் செய்யப்படும்.

முக்கிய குறிப்பு

கடந்த காலப் பரீட்சைகளில் மிகக் கூடிய சித்திகளை எமது மாணவர்களே பெற்றிருக்கின்றனர்.

CANTABIA INSTITUTE
(SHOOT OF OXONIA)
21, MAIN STREET, JAFFNA.
T' Phone: 24201

## மணிவாக்கு

உள்ளொன்று புறம்பொன்று இல்லாது இருந்தாலன்றி, களங்கமற்ற நேர்மை இருந்தாலன்றிக் கடவுளை அறிந்துணர முடியாது. கோணல்புத்தியுடையவரிடமிருந்து கடவுள் வெகுதொலைவிலேயே இருக்கின்றார்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்.

# நல்லைக் கந்தன் தேருலா

சைவ சமயத்திலே காணப்படும் தெய்வங்களுள் முதன்மை பெற்றது முருகன் எனலாம். கார் காலத்துப் பூக்கும் கடம்பமாலையை அணிந்திருப்பான் இக் குமரனின் திருமேனி சிவப்பு நிறமுடையது. தாமரை போன்ற சேவடியையும் பவளம் போன்ற திருமேனியையும் கொண்ட கந்தனின் உருவம் ஒளி மயமானது. எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்ட அந்தத் திருவொளிக்கு உவமையே இல்லை. கந்தனின் திருக்கரம் வேல் ஏந்தி நிற்கிறது. அவன் அடி தொட்டு, இடை தொட்டு, முடியளவும் நீண்டு நிற்கும் வேல் பகைவர்கள் எங்கிருந்தாலும், அவர்களைத் தேடிச் சென்று கருவறுக்கும் வீர வேல்' அது வெற்றிவேல்.

இலங்கையில் கந்த கோட்டங்களுள் தலைமை இடம் வகிப்பது நல்லூர்கந்த சுவாமி கோவில் எனலாம் இத் திருத்தலத்திலே பூசைகள் அபிசேகங்கள், திருவிழாக்கள் யாவும் சொல்லப்பட்ட கால நேரம் தவறாமல் கிரமமாக நடைபெறுவது சிறப்பம்சமாகும். திருவிழாக்காரர்களின் வரவையோ அல்லது முக்கிய பிரமுகர்களின் வரவையோ எதிர்பார்த்து கிரியைகள் உற்சவங்கள் பின் போடப்படும் வழக்கம் இத் திருப்பதியில் முற்றாகக் கிடையாது.

நல்லைக்கந்தன் கோவிலில் ஆடி அமாவாசையில் இருந்து ஆறாம் நாள் கொடியேறித் திருவிழாக்கள் இனிதுநடைபெற்றுவந்து, இன்று இரதோற்சவ தினமாகும். அதாவது இருபத்திநாலாந் திருவிழா தேர்த்திருவிழா. கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும், பொன்மோனியும், கோழிக்கொடியும், வடிவேலும் கொண்ட சண்முக மூர்த்தி வள்ளி தெய்வயானை சமேத ராயரதமேறி வரும் காட்சிக்கு ஈடாக இவ் வையகத்தில் உவமை இல்லை.

தேர்ப்பவனி முடிந்து, சண்முகப் பெருமான் பச்சை சாத்தித் தேரிலிருந்து திருக்கோயிலுக்குச் செல்லும் காட்சியைக் கண்டவர் இம் மானிடப் பிறவியின் பேற்றைப் பெற்றவராவர். பச்சைசாத்தி எழுந்தருளுவது, எல்லாச் சீவ ராசிகளுக்கும், சர்வானுக்கிரகம் செய்யும் கருத்தாவாகிய சதாசிவ மூர்த்திதானே என்பதையும் வேண்டுவார்வேண்டுவதை ஈயும் தன்மையுடையவர் என்பதையும், அனுக்கிரகம் செய்யும் குறிப்பையுடையதாகும்.

—எஸ்.சி.எஸ்.சிதம்பரநாதன்—

# நமது நோக்கு

## அடுத்த ஐந்தாண்டின் திட்டம்

இந்திய வானொலியில் ஆறுதல் காணும் இந்நாட்டுத் தமிழ்மக்கள் ஐந்தாண்டுத் திட்டமென்றால் இந்தியாவில் பிரபலப்பட்டுவரும் திட்டத்தைநினைத்தல்கூடும்.

நாம் குறிப்பிடுவது எங்கள் நாட்டின் திட்டம் பற்றியே. அடுத்த ஐந்தாண்டில் இந் நாட்டின் பொருளாதாரம் எவ்வாறு வளர்ச்சியடைய முடியுமென்று ஆலோசனைகள் சிலவற்றை நிதிஅமைச்சர் திரு. றொனி டி மெல் வழங்கியிருக்கிறார்.

இதொரு ஆராய்ச்சி அறிக்கையல்லஅல்லது வேறெந்த ஆவணத்தையும் ஆதாரமாகக் கொண்டும் நாம் இங்கு இவ் விடயத்தைக் குறிப்பிடவில்லை.

தேவிநுவர என்ற அமைச்சரின் பழைய தொகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய உரை மக்கள் சிந்தனைக் குரிய தாகையால் அவற்றிற் சில கருத்துக்களை இங்கு குறிப்பிடுவதுபொருத்தமாகும்.

இன்றைய ஆட்சிக் காலத்தின் முடிவாகிய 1989-ம் ஆண்டுவரைக்கும் திட்டமிட்ட அபிவிருத்தி வேலைகளில் 202 பில்லியன்ரூபாய் செலவாகுமென்பது நிதி அமைச்சரின் உத்தேசம்.

இந்த வருடபட்ஜட் துண்டு விழும் தொகையை எவ்வாறு சமாளிக்கலாமென்பது வேறு விடயம். அது வேறு விடயமானாலும் தூர நோக்குடைய வரவு செலவுத்திட்டம் ஐந்து வருட அமைப்பில் பொருந்துவது நாட்டின்நீண்டகால வளர்ச்சிக்கு உதவுமென்பதில் ஐயமில்லை.

இன்றைய கடன்பழு வேகமாக ஏறிக்கொண்டு போனாலும், நாட்டில் உருவாகும் பாரிய திட்டங்கள் இந்தப் பழுவிற்கு வருங்காலத்தில் ஈடுகொடுக்க முடியுமென்பது நிதி அமைச்சரின் நியாயமான நம்பிக்கை.

புள்ளிகளை இருத்தி எழுப்பும் மந்திரவாத ஆற்றல் படைத்த திரு. றொனி டி மெல் ''புள்ளிகள் புரளி பண்ணு; ஆனால் புரளிக்காரரே அவற்றுடன் சேட்டை விடுபவர்'' [Figures don't lie, but liars figure) என்ற ஆங்கில வாசகத்தில் நம்பிக்கை கொண்டிருப்பது போல் தெரிகிறது.

''எங்கள் நாடு தனது சொந்தக்காலில் நிற்கும் பலமற்றது. எங்கள் செல்வம் போதாது. வெளிநாட்டு உதவி, வெளிநாட்டு முதலீடு, வெளிநாட்டு உல்லாச பயணம் மிக அவசியமானவை என்றொரு தலையடி அடித்திருக்கிறார்.

மூச்சுக்காட்டாது அமைச்சரின் உரையைத் தொடர்ந்து படித்தால் அங்கு தென்படும் சில முரண்பாடுகள் திட்டத்தின் செயற்பாடுகள் சந்தேகத்துக்குரிய தெனத் தோன்றும்.

சாதாரண எம். பி., அமைச்சர்போலல்லாது அரசின் சிவில் சேவிஸில் சிரேட்ட பதவி வகித்தவர் திரு. றொனி டி மெல். நிதி விடயங்களில் சுத்த பொருளாதாரக் கருத்துக்களைப் பரிமாறுவாரென்ற நம்பிக்கை கேட்போரின் எதிர்பார்ப்பு ஆனால்அவருடைய பேச்சில் புள்ளிகள் எவ்வளவு ஆரவாரம் செய்தாலும் அரசியல் புகுந்த மட்டில் நாட்டின் ஒரு பகுதி மக்களுக்கு அச்சம் ஏற்படுவது சகஜம்.

பாம்புக்கு வால் காட்டி, மீனுக்கு தலைகாட்டி, காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் பேச்சை உரிய முறையில் அமைக்கும் கலை அரசியல்வாதிக்கு அவசியம்; இந்த உண்மை நிதி அமைச்சரையே விட்டு வைக்கவில்லை.

202 பில்லியன் ரூபா வென்றால் நாட்டில் வாழும் எத்தனை மக்களுக்குஅதனைக் கணிக்கும் அறிவுண்டு. ஒரு பில்லியன் என்றால் நூறு கோடி என்று அமெரிக்கா கணக்கிடுவதும், ஒரு லட்சம் கோடி என்று பிரிட்டன் கணக்கிடுவதும் சாதாரண மக்களுக்கு இக்காலத்திலேயே புரியாத புதிர். இக்காலம் என்பது மரக்கறிக் கடைக்குப் போகிறவர் நூறு ரூபாய் நோட்டு எடுத்துப் போவதைக் குறிக்கின்றது.

கண்ணை மூடிக்கொண்டு வெளிநாட்டு உதவியில் நாட்டைக் கட்டியெழுப்பும் சாதனைக்கு இன்றைய சவால் வடபகுதி பயங்கரவாதம் ஒன்றே என்ற அமைச்சரின் ஆணித்தரமான கருத்து தீவிரமான.

''சென்ற வருடம் நடைபெற்ற கலவரம் இந்தநாட்டின் வளர்ச்சிக்கு கால்தட்டுப் போட்டிருக்கிறது. இதனைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்ட அமைச்சர், ஒவ்வொரு தேசாபிமானிக்கும் விட்ட உருக்கமான கோரிக்கை வடபகுதி மக்களைப் பிரமிக்க வைக்கும்.

''பிரிவினை, ஒற்றுமையின்மையைக் கைவிட்டு தென்பகுதியில் வாழும் அப்பாவித் தமிழ் மக்களைத் தாக்காது, சண்டைவேண்டுமானால் இந்த அபாய நிலையில் எங்கள் ராணுவத்துக்கும் பொலிசுக்கும் உதவியாக வடபகுதி சென்று உதவியளிக்கலாம்'' என்ற ஆலோசனை வழங்கியிருக்கிறார் நிதிஅமைச்சர்.

எனவே இப்பாரிய ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரே ஒரு எதிரி எங்கள் மத்தியில் இருப்பது நாட்டுக்கு மட்டுமல்ல இப்பகுதி மக்களுக்கு பேரச்சமாகிறது.

### பயறு உற்பத்தி

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் பயறு உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயறு உற்பத்திக்கு ஊக்கம் கொடுத்து உற்பத்தியை அதிகரிக்கச் செய்து தன்னிறைவு காணச்செய்யும் முயற்சியில் மாவட்ட பிரதிவிவசாய விரிவாக்க பணிப்பாளர் திரு. பத்மநாதன் ஈடுபட்டுள்ளார்.

# மக்கள் கருத்து

## மருத்துவக்கல்வி

மருத்துவத்துறையில் கல்விப் பயிற்சி அளிப்பது சுலபமான கடமையல்ல. மருத்துவ மாணவரொருவர் தகுந்த முறையில் நோயாளியொருவருக்கு மேற்கத்தைய முறையில் சிகிச்சையளிக்கக் கூடிய வைத்தியராவதற்கு பலவிதமான மருத்துவத்துறையில் பயிற்சி பெறவேண்டும். அப்பயிற்சிகளை அளிப்பதற்கு பல்வேறு மருத்துவத்துறைகளில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்கள் பலர் மருத்துவக்கல்லூரிக்கோ, மருத்துவ நிறுவனத்திற்கோ தேவைப்படுவார்கள்.

மருத்துவக் கல்லூரி அல்லது மருத்துவநிறுவனத்தில் ஆய்வு கூடங்களை அமைப்பதற்கும். பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும, விரிவுரை நிகழ்த்துவதற்கும் சிறந்த கட்டட வசதிகளும், கட்டடங்களும் தேவை. பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களினால் சிகிச்சையளிக்கப்படுகின்ற வைத்தியசாலையில் தான் மருத்துவமாணவனொருவன் தகுந்த பயிற்சியைப்பெறமுடியும். மருத்துவப் பயிற்சி அளிப்பதற்கு கோடிக் கணக்கான பெறுமதிமிக்க மருத்துவ உபகரணங்கள் கட்டாயம் தேவைப்படும். அரசாங்க மருத்து சபையின் அங்கீகாரம் பெறாத எந்தவொரு மருத்துவ பயிற்சி நிலையத்திலும் தேர்ச்சிபெற்ற வைத்தியர்கள் மருத்துவம் சம்பந்தமான விரிவுரைகளை நிகழ்த்தவோ, பரிசோதனைகளை மேற்கொள்ளவோ முடியாது. மருத்துவம் தொடர்பான சகல துறைகளும் ஒன்றிணைத்துப் பரிபாலனம் செய்யப்படவேண்டும்

மேற்கூறப்பட்ட அம்சங்களை உள்ளடக்கியதாக மருத்துவக் கல்லூரியோ அல்லது மருத்துவ நிறுவனமோவுள்ளது, என்பதை தாமே வந்து மதிப்பிடாமல் இவற்றில் பயிற்சி பெறும் மருத்துவ மாணவர்களை எந்தவொரு வெளிநாட்டு மருத்துவக் கல்லூரிகளோ, பயிற்சி நிலையங்களோ பரீட்சிப்பதற்கு முன்வர மாட்டாது.

டாக்டர். எஸ்.சுப்பிரமணியம்
தலைவர்
யாழ். மருத்துவச் சங்கம்

### இன்று நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா

## நல்லூர்ப்பெருமான் விழாக்கோலம்

வண்ண விழாவில் வருவேற் பவனியதை
கண்ணினாற் காண்பார் கவலையுறார்- எண்ணியே
நெஞ்சில் அதனைத் தினமும் துதிப்போர்க்கு
தஞ்சமே என்றுமவன் தாள்
தேர்பின் உருண்டே திருவீதிசூழ்ந்திடுவோர்
ஆர் மது நோக்கின் அகமுருகும்- சீர்மிக்க
நல்லூர்ப் பெருமான்றன் நல்லருள் தானடைந்தாய்
இல்லையே துன்பம் இனி

வ. குகசர்மா.

## தேரேறி வருமுருகன்

தேரேறி வருகின்றான்
திகழ்நல்லை முருகன்றான்
வாருங்கள் வடம்பிடிப்போம்
வரமளிப்பான் வடிவேலன்
பாடுங்கள் பேர்புகழை
பரவுங்கள் பதமலரை
நாடுங்கள் அறநெறியை
நாமெல்லா மவன்மக்கள்

-மணிமன்றன்.

## நல்லைப்பழம்

நல்லையில் நலந்தரும் இன்பப்பழம்- அவன்
எல்லையிலாத கருணைப்பழம்
தந்தைக்குபதேசித்த ஞானப்பழம்- அவன்
வள்ளிதெய்வானையர் செல்வப்பழம்
அல்லல் அறுத்திடும் முடிவுப்பழம்- அவன்
என்றும் எமைக்காக்கும் துணைப்பழம்
அண்ணனார் பெற்றதோமாவின்பழம்- அதனால்
ஆண்டியாய் ஆனதித்துறவிப்பழம்
ஔவைக்குத் தந்தது சுட்டபழம்- அவன்
அறிவுக்கடலில் விளையாடும்பழம்
சூரனை ஒழித்த நல்வீரப்பழம்- அவன்
பயங்களைப் போக்கிடும் அபயப்பழம்
சித்தியெலாந்தரு முத்திப்பழம்- அவனைச்
சிந்தித்திருப்பவர்க்குயாவும் பழம்!

— சங்குவேலி ப. மகேந்திரதாசன்.

சாரும் தவமுடையார் தாம் போற்றும் செவ்வேள்தான்
நீரில் நெருப்பில் நெடுவிசும்பில் நீணிலத்தில்
சேரும் வளியதனில் திகளும் பரஞ்சோதி
தேரில் இவர்ந்துவரும் தேவனைநான் கண்டேனே.

மு. சிவராசா.

## தேர் ஏறி வருகிறான் திருக்குமரன்

ஆனைமுகன் தம்பியே அம்பிகையின் மைந்தனே
சேனை ஆறு கொண்டவா, செந்தில் வாழ் திருக்குமரா
மானை ஒத்த மனைவியர், மருவும் மயில்வாகனா
தேனே திருக்குமரா, திருப்புகழின் திருவமுதே.

ஆறுபடை ஒன்றடக்கி அடியார்க்கு அருள்சொரிய
நீறுமுகம் காட்டி வந்து நின்ற திருத்தேர்தனில்
ஏறிஎமைக் காக்கவென்று எம்பெருமான் எழுந்தருளி
வீறுநடை போட்டு வெளிவீதி உலாவுகிறான்.

நல்லைக்கவி. மணி. சற்குணா

## வினையறுக்க தேரேறி வருகிறான்

தினமெல்லாம் வையகத்தில் தீங்கெமக்கு விளைகிறது
குணங்காக்கும் மானிடர்க்கு குவலயத்தில்—மேலும்
சினங்கூடி வந்திறங்கு செல்வமெல்லாம் சிதைகிறது
இனம் கண்டு வினையறுக்க நல்லூரான் தேரேறி
வருகின்றான்

காரை. எம்.பி அருளானந்தன்

## அரசியலமைப்புச் சட்டத்தின் 9-வது திருத்தச்சட்டமூலம்

(கொழும்பு)

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 9வது திருத்தச் சட்டமூலம், பாராளுமன்ற தேர்தல் கட்டளை நகல் சட்டமூலம் நேற்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவினால் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த சட்டமூலத்தை தாக்கல் செய்து பேசிய பிரதமர் ஆர். பிரேமதாசா, அரசாங்க ஊழியர்கள் தேர்தல்களில் ஈடுபடுவதற்கு இந்த சட்டமூலம் வழிவகுக்கும் என்று தெரிவித்தார்

இந்த சட்டமூலத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மதவாச்சி தொகுதி உறுப்பினர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா ''இந்த சட்டமூலம்பற்றி சகல விபரங்களையும் பொதுமக்கள் அறிந்திருக்கவில்லையென்றும், இதனால் பிறிதொரு திகதியில் இந்தச் சட்டமூலத்தை தாக்கல் செய்யலாம் என்றும் ஆலோசனை தெரிவித்தார். மேலும் இந்தச் சட்டமூலம் தெரிவுக்குழுவில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு முற்றிலும் முரணான வகையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார். இந்தச் சட்டமூலத்தை கொண்டுவருவது இந்த அரசாங்கம் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் முயற்சியின் இன்னொரு மையக்கல்லாக அமைகிறது. இதன்மூலம் இலங்கையில் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார். மத்துகம எம். பி. திரு. அனில் முனசிங்கா தமது உரையில் ''தேர்தலை ஒத்திவைப்பதற்கு உலகின் எந்தவொரு நாடும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவில்லை. ஒரு அரசாங்கத்தை பதவியில் அமர்த்தவும், இறக்கவும் கூடிய ஆயுதம் மக்கள் கையில்தான் இருக்கிறது. கடந்த ஆண்டு தேர்தலை ஒத்திவைத்ததன் பலாபலன்களை கடந்த ஜூலையில் நாம் அனுபவித்து விட்டோம். இலங்கையில் தற்போதுள்ள நிலையில் ஒரு தேர்தல் ஆணைக்குழுவை நியமித்து தேர்தல்கள் நடத்தப்படவேண்டும். இந்நாட்டில் ஜனநாயகம் அழிந்துகொண்டு செல்கிறது. ஆயினும் 25 சதவீத ஜனநாயகம் இருக்கும் வரை நாம் தேர்தலில் போட்டியிட்டே தீருவோம்.

சர்வஜன வாக்கெடுப்பு சரியான முறையில் நடைபெற்றதா? உலகத்திலே எங்கும் இல்லாத வகையில் பல தவறுகள் சர்வஜன வாக்கெடுப்பில் இடம்பெற்றுள்ளன என்றார்.

(இ-சூ)

● நடக்கமுடியாத வயோதிபர்

## தவழ்ந்து சென்று நேற்று ஓய்வூதியம் பெற்ற பரிதாபம்

(கா. யோகநாதன்)

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்று மானிப்பாய். காரைநகர், யாழ்ப்பாணம், ஆகிய இடங்களில், தபால் கந்தோர்மூலம் ஓய்வூதியம் பெற்றுவந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

இம்மாதம் 27ம் தேதி திங்கட்கிழமை, அச்சுவேலி அளவெட்டி' கோப்பாய் ஆகிய இடங்களில் உள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில், காலை 10-30 மணிக்கே ஓய்வூதியம் வழங்கும்வேலை ஆரம்பமானது காலை 6 மணிக்கு, கியூவில் நின்ற காரைநகரை சேர்ந்த பெண் ஒருவருக்கு நண்பகல் 11,20 மணிக்கே ஓய்வூதியம் கிடைத்தது.

நடக்க முடியாத ஒரு வயோதிபர் கியூவில் தவழ்ந்து சென்றே ஓய்வூதியம் பெற்றார். அவருடன் உதவியாளர் உறவினர் எவரும் வந்திருக்கவில்லை.

சிலர் காலைச் சாப்பாடு, தண்ணீர் சோடா ஆகியவற்றையும் கொண்டு வந்திருந்தனர் 90 வீதம் இவர்கள் வயோதிபர்களாகவே காணப்பட்டனர். மற்றவர்கள் 50 வயதைத் தாண்டியவர்களாக இருந்தனர்.

சிலவயோதிபர்களை கியூவில் உறவினர்கள் பிடித்துக் கொண்டு சென்றனர். ஒருவர் ஒரே இடத்தில் 3 மணித்தியாலத்திற்குமேல் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது வங்கியிலிருந்து பணம் வந்து அதை கணக்குப் பார்த்து ஓய்வூதியம் வழங்கும் வேலை ஆரம்பிக்கும்வரை வயோதிபர்கள் ஒரே இடத்தில் நிற்க வேண்டியேற்பட்டது.

துரையப்பா மைதானப் பகுதியில் மல சல கூட வசதி எதுவும் இல்லாததனால் வயோதிபர்கள் இயற்கையின் உபாதையில் கஷ்டப்பட்டனர்.

நடக்க முடியாத வயோதிபர்கள் சிலர் காரைநகர், மானிப்பாய் போன்ற இடங்களிலிருந்து வாடகைக் காரில் வந்திருந்தனர். காலை 6 மணிக்கு வந்த கார்கள். நண்பகல் 12 மணி வரை அங்கு காணப்பட்டன. பென்சன் பணத்தில் கால்வாசி காருக்கு கொடுக்க வேண்டும் என்று வயோதிபர் ஒருவர் தெரிவித்தார்.

ஓய்வூதியம் பெற்றுவந்த சில வயோதிபர்கள், முனியப்பர் கோவில் முற்பகுதி மரநிழலில் அமர்ந்து தங்கள் பழைய நண்பர்களைச் சந்தித்து பொக்கை வாயினால் சிரித்து பேசி இனித்து கதைத்துக்கொண்டிருந்தார்கள். இப்பேச்சுக்களில்'

(8ம் பக்கம் பார்க்க)

## கடற்றொழிலாளர்கள் தொழில் செய்யமுடியாத நிலை

### யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜர்

[மாவிட்டபுரம்]

''அண்மைக்காலச் சம்பவங்களையடுத்துக் கடல் கண்காணிப்பு வலயத்திற்கு உட்பட்ட பகுதிகளில்கூடக் கடற்றொழிலாளர்கள் தொழில் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது, தொழிலுக்குச்செல்லும் கடற்றொழிலாளர்களைக் கடற்படையினர் விரட்டிவருகின்றனர். இந்த நிலைக்கு முற்றுப் புள்ளிவைத்துக் கண்காணிப்பு வலயத்திற்குட்பட்ட பகுதிகளிலாவது தொழில் செய்யக்கூடிய வசதியை ஏற்படுத்தவேண்டும்.

இவ்வாறு பலாலி கடற்றொழில் விரிவாக்க சேவைச் சங்கம் யாழ். அரசாங்க அதிபர், யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் ஆகியோருகு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடல் கண்காணிப்பு லலயம் காரணமாக வடபகுதிக் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வறுமைநிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். இதனால் மீன் உற்பத்தி குறைந்து பொருளாதாரவீழ்ச்சியும் ஏற்பட்டிருந்தது.

தற்போது இதற்கும் மேலாக தொழிலே செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். அண்மைக்கால சம்பவங்களையடுத்து கடலுக்குச் செல்ல முடியாமல் இருக்கிறது. தொழிலுக்குச் செல்பவர்களை கடற்படையினர்தொழில் செய்யவேண்டாம் என்று கூறி திருப்பி அனுப்புகின்றனர். இதனால் கடற்றொழிலாளர்கள் கடலில் எவ்வித தொழிலும் செய்ய முடியாமல் சொல்லொணாக் கஷ்டம் அனுபவிக்கும் நிலையில் உள்ளனர். கண்காணிப்பு வலயத்தை மீறுமல் அதற்கு உட்பட்ட பகுதிகளில் கூட தொழில் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் இதற்கு நிவாரணம் கண்டு கடற்றொழிலாளர்களின் கஷ்டத்தை போக்க உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## கலைப்பட்டதாரி ஆசிரியர் 5-ல் கடமை ஏற்கவேண்டும்!

(மாவிட்டபுரம்)

அண்மையில் நியமனம் பெற்று, பயிற்சி பெற்றுவந்த கலைப் பட்டதாரி ஆசிரியர்களை செப்டம்பர் 5-ம் திகதி அவர்களுக்குரிய இடங்களில் கடமைகளை ஏற்கும்படி பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

கலைப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்றவர்களுக்கு மகரகம ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்து இம்மாதம் 27-ம் திகதியுடன் இப்பயிற்கி பூர்த்தியடைகிறது.

இவ்வாறு பயிற்சி பெற்றவர்களைச் செப்டம்பர் 5-ம் திகதி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் கடமையைப் பொறுப்பேற்கும்படி பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவாகமாகாதவர்கள் அதிகமாக மலைநாட்டுப் பகுதியிலும், கொழும்பு போன்ற பகுதிகளிலுமே நியமிக்கப்பட்டுள்ளனர். விவாகமானவர்கள் வவுனியா மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ளனர்.




## கடற்றொழிலாளிக்கு பலத்த வாள்வெட்டு

(பண்டத்தரிப்பு)

கடலில் மீன் பிடிக்கச்சென்ற கடற்றொழிலாளி ஒருவர் பலத்த வாள் வெட்டுக் காயங்களுக்குள்ளாகி அபாயகரமான நிலையில் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரைநகர், கோவளம் என்னுமிடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை என்னும் 38 வயதுடைய நபரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டவராவர். கடந்த 17ம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்க பட்ட இவர் இது வரை சுயநினைவு அற்ற நிலையில் இருப்பதாக வைத்தியசாலை பொலிசார் தெரிவித்தனர்.

## கிளிநொச்சி கோணாவில் பகுதியில் அகதிகளுக்கென பாரிய குடியேற்றத் திட்டம்!

[வவனியா]

கிளிநொச்சி பகுதியிலுள்ள கோணாவில் என்ற இடத்தில் அகதிகள் குடியமர்த்தப்படவுள்ளனர். இதற்கு ஐந்து இலட்சம் ரூபா முதலீடு செய்யப்படவுள்ளது சுமார் 200 குடும்பங்கள் இங்கு குடியேற்றப்படவுள்ளன.

கிளிநொச்சியிலுள்ள காந்தி சேவா சங்கமும, வவனியா சர்வோதய இயக்கமும் இணைந்து இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளன. அகதி முகாம்களிலுள்ளவர்களே இங்கு குடியமர்த்தப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பிலிருந்தும், இங்கு குடியேற 50 குடும்பங்கள் வரவுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டது கிளிநொச்சியிலிருந்து அரச அதிபரின் சிபார்சிலும் 50 குடும்பங்கள் இததிட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன என்று வவனியா சர்வோதய இயக்க இணைப்பாளர் தெரிவித்தார் அகதிகள் குடியேற்றம் தொடர்பாக காந்தி சேவா சங்கப் பிரமுகர் ஆன திரு. காந்தி வேலாயுதபிள்ளை, வவனியா சர்வோதய இயக்க இணைப்பாளர் திரு. க. கதிரமலை ஆகியோர் கிளிநொச்சியிலுள்ள சில உயரதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

முருகண்டியிலிருந்து ஏழு மைல்தொலைவிலுள்ள கோணாவில் என்ற இடத்திலேயே 200 ஏக்கர் காணி அகதிகள் குடியேற்றத்துக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், இங்கு குடியமர்த்தப்படவிருக்கும் அகதிகளின் நலன் கருதி திட்டமொன்றும் வகுக்கப்பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு ஆஸ்பத்திரியில் பிரச்னை டாக்டர், ஊழியர்கள் திடீர் இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

மண்டைதீவு அரசினர் வைத்தியசாலையில் ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக அண்மையில் நடாத்தப்பட்ட திணைக்கள விசாரணையை அடுத்து அங்கு கடமையாற்றும் வைத்திய அதிகாரி, மருந்துக்கலவையாளர் உட்பட மற்றும் ஊழியர்கள் அனைவரும் வேறு இடங்களுக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். யாழ் பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலக கணக்காளர் மேற்படி வைத்தியசாலையில் வைத்து நடாத்திய விசாரணையை அடுத்து இந்த இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது ஊர்ப் பொதுமக்கள் சிலருக்கும் வைத்தியசாலை ஊழியருக்குமிடையில் ஏற்பட்ட தகராறின் எதிரொலியாகவே இந்த ஒழுங்கு நடவடிக்கை யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்தில்

# ஓய்வூதியம் பெறுவோருக்கு ஏற்படும் அசௌகரியங்கள்

## யாழ். அரசாங்க அதிபர் வருத்தம்

(அலுவலகநிருபர்)

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுவோர்களுக்கு ஏற்பட்டுவரும் அசௌகரியங்கள் குறித்து யாழ். அரசாங்க அதிபர் வருத்தம் தெரிவித்துள்ளதுடன், இவைதற்காலிகமானதெனவும், இவற்றைப் பொறுத்துக் கொள்ளுமாறும் யாழ். அரசாங்கஅதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் அறிக்கையொன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:-

''யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களின் தொகை சுமார் 16,500 ஆயிரம் ஆகும்.

''இதில் 600 பேர் வெளிநாட்டு ஓய்வூதியம் பெறுபவர்கள்.

சகல ஓய்வூதியம் பெறுவோரில் 8, 250 பேருக்கு தபால் அலுவலகம் மூலமும், 5,500 பேருக்கு வங்கிமூலமும், ஏனையோர் கச்சேரி மூலமும் பெறுவோர் ஆவர்.

கடந்த சில மாதமாக அஞ்சல் அலுவலகங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினல் பொலிஸ் பாதுகாப்புடன் ஓய்வூதியப்பணம் கொடுக்கப்பட்டதும், ஒய்வூதியம் பெறுவோர்பலர் இவ்விடயத்தில் சிறந்த ஊக்கமும் துணையும் கொடுத்தமையும் பாராட்டத் தக்கதாகும்.

இருந்தும் கடந்தசில வாரங்களாக வங்கிகளிலும், யாழ். செயலகத்திலும் இடம்பெற்ற வன்செயல்களினல் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழமைபோல் அவர்களது ஓய்வூதியம் கொடுக்கமுடியாத நிலைக்குத் தள்ளப் பட்டமையும், அளிக்கப்பட்டு வந்த பாதுகாப்பின்மையால் தபால்அலுவலகங்களின் மூலம் கொடுப்பனவுகள் ஏதும் இல்லாமல் போனதும் வருத்தப் படவேண்டியதொன்று.

வங்கிகளும் தபால் அலுவலகங்களும் தகுந்த பாதுகாப்பின்றி இயங்கமுடியாதெனக் கூறியதும், பாதுகாப்புப் படையினர் அத்தகைய பாதுகாப்பு வசதிகளை அந்தந்த நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட மாட்டாதென எடுத்துரைத்ததையும் என்னேடு ஓரளவு நேரடித் தொடர்பு கொண்டவருக்கே தெரியும்.

வங்கிகளின் தலைவர்களுடனும் தபால் திணைக்கள தலைவர்களுடனும் பாதுகாப்புப் படைத் தலைவர்களுடனும் எடுக்கப்பட்ட நேரடித் தொடர்புகளின் மூலம் ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான பல ஆலோசனைகள் முன்வைக்கப் பட்டன. அதற்குள் யாழ். பிரதான தபால் கந்தோரிலும் யாழ். பிரதான வங்கிகளிலும் இக் கொடுப்பனவுகட்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. இருந்தும் இம்முயற்சி கைகூடாதெனக் காணப்படுமிடத்து வங்கிக் கொடுப்பனவுகளை குருநகரில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இலங்கை வங்கிக் கிளையிலும் தபால் அலுவலகக்கொடுப்பனவுகளை பொலிஸ் அதிகாரிகளின் கண்டிப்பான வலியுறுத்தலின் பேரில் யாழ். விளையாட்டரங்குக் கட்டிடத்திலும் ஓய்வூதியம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இவ்வொழுங்கிலும் சில தாமதங்கள், தடங்கல் ஏற்பட்டிருக்கலாம் ஆயினும் அவை எனக்கு அப்பாற்பட்டவை என்பதை சகலரும் அறிவர்.

ஒய்வூதியம் பெறுபவர்கள் சிலர் அடையும் சில அசௌகரியங்களையிட்டு குறைகூறியுமுள்ளனர் இருந்தும் இவ்வசதியீனங்களை தற்காலிகமானதெனக் கருதி தாங்கிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். (மா)

## புகார்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மாதகல்வீதியில் தந்திக் கம்பிகள் அடிக்கடி விஷமிகளினல் அறுத்தெடுக்கப்படுவதால் இப் பகுதி தொலைபேசி, தந்திச் சேவைகள் அடிக்கடி பாதிக்கப்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

## மாதகலில் ரோந்து நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

மாதகல் கடற்கரைப் பகுதியில் கடந்த சில தினங்களாக ரோந்து நடவடிக்கைகள் அதிகமாக உள்ளது. மிகவும் சமீபமாக கடற்படையினரின் ரோந்து படகுச் சேவையும் அதிகமாக காணப்படுகிறது.

## இன்றைய பலன்

மாதம்— ஆவணி
திகதி— [25-08-1984]
வாரம்— சனி
திதி— சதுர்த்தி பின்இரவு 4-10 வரை
நக்ஷத்திரம்— பூரம் பகல் 10-36 ன் மேல் ஆயிலியம்

மேடம்: மனதில் அமைதி குன்றும் அயலவர்களின் குறுக்கு வழித்தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும் அவசர முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

இடபம்: கனிவான நினைவுகளில் மூழ்கிப் போவீர்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும் நீண்டநாள் அபிலாஷைகள் இன்று நிறைவேறும் உங்களுக்கு உதவ மற்றவர்கள் முன்வருவார்.

மிதுனம்: அமைதிக்குப்பங்கம் ஏற்படும் நெருங்கிய ஒருவரின் உடல் நலம்பாதிக்கப்படலாம். குறைகேட்க நேரிடும் கடமையில் தடைகள் தோன்றும் பிணக்குகுஇடம்கொடாது நடக்கவும்.

கடகம்: கல்வித்துறையில் உற்சாகம் பிறக்கும் வாகன சொந்தக்காரர்களுக்கு நல்ல நாள் சிலருக்கு தாய் வழியால் உதவியுண்டு.

சிங்கம்: வசதிகள் பெருகும் வாழ்க்கையும் வளம் நிறைந்ததாகக் காணப்படும் தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும்.

கன்னி: இதயம் எரிமலையாகும் எதிரிகள் தாக்குவர் ஏமாற்றத்திற்கும் இடமுண்டு அதிகப் பேச்சைத் தவிர்த்துக் கொள்வது விரும்பதக்கது.

துலாம்; களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு காதலர் வாழ்க்கை"யில் தித்திப்பான சம்பவங்கள் இடம்பெறும் புத்திர வழியால் மகிழ்ச்சிக்கு இ முண்டு

விருச்சிகம்: கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர் மற்றவர்களின் ஏழனப் பார்வைக்கு இலக்காவீர் பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும்.

தனுசு: தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும் சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் பிறக்கும் பொதுப்பணிகளின் மூலம் பொது மக்கள் ஆதரவு உண்டு.

மகரம்: உற்சாகமாகநாளை ஆரம்பிப்பீர்கள் தொழில் துறையில் அதிக ஆர்வம் பிறக்கும் வெளியிடத்தில்

(7-ம் பக்கம் பார்க்க)


Computer Programming and Data Processing Course

(BASIC LANGUAGE)

8—வது பிரிவு

ஆரம்பம்:

STREAM I
(வார நாள் வகுப்புகள்) 5-09-84

STREAM II
(வார இறுதி வகுப்புகள்) —15 09 84

கட்டணம்: RS. 1500/-

பயிற்சியின் விபரம்

PART I — A. INTRODUCTION TO COMPUTER SYSTEM AND DATA PROCESSING.
B. NUMBER SYSTEM ALGORITHM CODING METHODS, FLOW CHARTING DECISION TABLE.
PART II PROGRAMMING LANGUAGE INCLUDING FILE HANDLING.
PRACTICAL: எங்கள் நவீன வசதிகளுடன் கூடிய முற்றுகக் குளிரூட்டப்பட்ட கொம்பியூட்டர் அறையில் உலகில் மிகப் பிரசித்தி பெற்றதும் இலங்கையில் பல வியாபார ஸ்தாபனங்களில் வர்த்தக ரீதியாகப் பயன்படுத்தப்படும் COMMODORE PET 8000 SERIES (96 K) COMMODORE 4000 SERIES (32 K) COMMODORE 64 (64 K) VIC 20 முதலான பலதரப்பட்ட கொம்பியூடர்களில் 50 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி.
சான்றிதழ்; பயிற்சி முடிவில் சித்தியெய்தும் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

(வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்)

CANTABIA INSTITUTE
21, Main Street, Jaffna.
T' Phone: 24201



உங்களுக்கென
ஓர் டி லூக்ஸ் மனையைக்
கே. ஜி. நகரில் பெற்றுக்கொள்ளுங்கள்

கே. ஜி. காணி அபிவிருத்தி (தனியார்) லிமிட்டெட், ஆரம்பித்துள்ள இவ்வீடமைப்புத் திட்டத்தின் முதற்பாகம் வருகிற மாதத்தில் பூர்த்தி செய்யப் படவுள்ளது. இதில் உங்களுக்கென ஓர் வீட்டைப் பெற்றுக்கொள்ள ஓர் அரிய வாய்ப்பு உள்ளது.

இடம்
★ இராஜ வீதி, யாழ்ப்பாணம்
★ பிரதான சந்தைகள், பிரபல பாடசாலைகள் கிட்டிய தூரத்தில் உள்ளன.
★ போக்குவரத்து — பஸ் வண்டி இலக்கம் 986

காணி
★ வீடு ஒன்றரைப் பரப்புக் காணியில் அமைக்கப்படும்.
★ வீட்டுத் தோட்டத்திற்கு உகந்த செழிப்பான நிலம்.
★ தனிப்பட்ட நீர்வசதி குழாய் மூலம் வழங்கப்படும்.

வீடுகள்
★ 3 படுக்கையறைகள், வசிக்கும் அறை, சமையலறை, மலசலகூட வசதிகள்.
★ கூரை வேலைப்பாடு — பனந்தீராந்திகளும் ஓடுகளும்.
★ யன்னற் கதவு நிலைகள் — பலு மரம் (Palu Timber)
★ மாபிள் ஓடு அடுக்கப்பட்ட மலசலகூடம்.
★ சுற்று மதில்.
★ வேண்டுகோளிற்கிணங்க மின் விசிறிகள், சமையலறை அமைப்புக்கள் அமைத்துக் கொடுக்கப்படும்.
★ கட்டிட நிர்மாணிப்பு — துரைராஜா அசோசியேற்ஸ், ஆக்கிடெக்ஸ் அன்ட் என்ஜினியேர்ஸ். (Thurairajah Associates Architects and Engineers)

உங்கள் வீட்டிற்குத் தனிச்சிறப்பை அளிக்க, நிறம், நிலத்தின் தன்மை, மேலும் அலங்கார அமைப்புக்களின் தேர்விற்கு நேரில் அழைக்கப்படுவீர்கள்.

கூடிய விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

விற்பனை அலுவலகஸ்தர்:- 62, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,
கொழும்பு - 7.
தொலைபேசி: 21349

அல்லது எமது இணைப்பு அலுவலகஸ்தர்:-
புரொமோட்டேர்ஸ் என்ஜினியரிங்
கொம்பனி லிமிட்டெட்,
(Promoters Engineering Co. Ltd.)
பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24006

இவர்கள் உங்களுக்கு சகல உதவிகளையும் அளிக்க ஆவலாயுள்ளனர். (1422)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**என் தம்பி**

**சாந்தி** [யாழ் நகர்]
10-30, 2-30, 4-45, 700
Michael caine David Warner in
THE ISLAND
action packed
adults only

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30, 6,30
25—27
HAUNTED HOUSE OF HORROR
(Adults only)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். - லதா
நம்பியார்
**பல்லாண்டு வாழ்க**
(புத்தம் புதிய பிரதி-கலர்)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம் ஜி. ஆர். -தேவிகா
**ஆனந்த ஜோதி**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
**அவசரக் கல்யாணம்**

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணம்மா
**மனோகரா**
(புதிய பிரதி)

**வின்சர்** (யாழ். நகர்)
24th—26th
தினசரி 10-30. 2-00, 4-30
EAGLE'S WING
A BATTLE FOR SURVIVAL
உயிர் வாழ்வதற்கு உரிமைப் போராட்டம். திகிலூட்டும் வியக்கத்தக்க காட்சிகள் நிறைந்த சித்திரம்

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30,, 2-30 6-30,
ஜெய்சங்கர்
ஸ்ரீதேவி
**முடிசூடா மன்னன்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
நாகேஷ் - ரவிச்சந்திரன்
**எங்களுக்கும் காலம் வரும்**
[புதிய பிரதி]

இலங்கைப் பிரச்னைக்கு

# சமாதானப் பேச்சுக்கள் மூலமே தீர்வுவேண்டும்!

## —ரஷ்ய துணைப்பிரதமர்

(புதுடில்லி)

''சமாதான பேச்சு வார்த்தை மூலமும் அமைதியான வழிமுறைகள் கடைப்பிடிப்பதுவே இலங்கையின் இனப் பிரச்சனைக்கு தீர்வுகாணும் ஒரேவழியாகும்.'' என்று சோவியத்துணைப் பிரதமர். ஏ. எஸ். தூய்டேல் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் இவர் புதுடில்லியில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ''ஒரு நாட்டிலுள்ள பெரும்பான்மை இனம் போன்று சிறுபான்மை இனமும் சமஉரிமைகளை பெற்றிருக்க வேண்டும். சோவியத் யூனியனில் 100க்கு மேற்பட்ட தேசியஇனங்களும், இனக்குழுக்களும் வாழ்கின்றனர். அங்கு இந்த இனங்களுக்கு சமஉரிமை சமஅந்தஸ்து என்பன வழங்கப்பட்டிருக்காவிடின் எமது அரசின் நிலைபாடு பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

[இ.சூ]

# ஹெலிகாப்டர் விபத்தில் லெபனன் தளபதி பலி!

பெய்ரூட், ஆக. 24

லெபனன் இராணுவத் தளபதி ஜெனரல் நபிம் ஹக்கிம் நேற்றுக்காலை ஹெலிகாப்டர் விபத்தொன்றில் கொல்லப்பட்டார். இவருடன் வேறு எட்டுப்பேரும் இவ்விபத்தில் பலியானார்கள்.

இவர்கள் பயணஞ் செய்த ஹெலிக்காப்டர் மலையொன்றுடன் மோதியது. இதனையடுத்து இந்தக் ஹெலிக்காப்டர் தீப்பிடித்த நிலையில் நிலத்தில் வீழ்ந்து நொருங்கியது. வடலெபனன் மலைப்பகுதியே இவ்விபத்து நடந்த இடமாகும்.

விபத்தில் கொல்லப்பட்ட இராணுவத் தளபதி லெபனன் டுரூஸ் முஸ்லிம் இயக்கப் பிரிவைச் சேர்ந்தவர் இவர் அண்மையில் இவ்வியக்கம் அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டதையடுத்து லெபனன் இராணுவத் தளபதியானார்.

இவ்விபத்துக் குறித்துப் பல லெபனன் அரசியல் வட்டாரங்கள் அதிர்ச்சியடைந்துள்ளன.

(கி)

## குரும்பசிட்டி சித்திவிநாயகர் கும்பாபிஷேகம்

(மாவிட்டபுரம்)

குரும்பசிட்டி சித்திவிநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக விழா இம்மாதம் 31ம் திகதி நடை பெற இருக்கிறது

பழம் பெருமை வாய்ந்த இவ் வாலயம் பெரும் செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு இக் கும்பாபிஷேக விழா இடம் பெறுகிறது.

கும்பாபிஷேகத்தையொட்டி இம்மாதம் 27ம் திகதி கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்று 30ம் திகதி கும்பாபிஷேக விழா இடம் பெற உள்ளது.

சிவஸ்ரீ. கந்த. சிவபாத சுந்தரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்

## யாருடையது

யாழ். மாட்டீன் வீதியைச் சேர்ந்த திரு. எஸ். சங்கராபரணம் என்பவர் இரு சேட் துணிகளை மினிவான் ஒன்றில் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## ஈடுசெய்ய முடியாதஇழப்பு

விளையாட்டுத் துறையில் தலைசிறந்து விளங்கியவர் அமரர் நாகலிங்கம் சின்னையா. இவர் விளையாட்டுத்துறையில் பலநுட்பங்களைக் கையாண்டு தனது திறமையை வெளிப்படுத்தினர். அராலியில் விளையாட்டு மைதானமொன்றை அமைப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்து, அதனைத்திறம்பட பராமரித்தும் வந்தார். பல விளையாட்டுப் போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வசித்தபெருமையும் இவருக்குண்டு. இவர்பல விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்கியளித்து விளையாட்டுத் துறையில் அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தார்.

இவர் விளையாட்டுத்துறையில் மட்டுமன்றி அரசியலிலும் ஈடுபட்டு டலசாத்வீகப் போராட்டங்களை நடத்தினர். தமிழ் மக்களின் வாழ்க்கையைவளம் படுத்தும் பல பொதுப்பணிகளிலும் ஈடுபட்டு அயராது உழைத்தார்.

அராலிக்கிராமத்தின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் இவர் உழைத்தார். அன்னாரின் மறைவு தமிழ்மக்களுக்கு குறிப்பாக அராலிமக்களுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

பொ. சிவராசா

## ''ஆச்சிரம வாழ்க்கையின் சிறப்பு''

(அரியாலை)

''நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் சிறியகுடிசையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட இந்த ஆச்சிரமம் இன்று நன்கு வளர்ச்சி பெற்றிருந்தாலும் அது ஆச்சிரமத்தின் கலாச்சாரங்களைப் பிரதிபலிப்பதாக அமைந்திருப்பதுடன் கீழைத்தேய வணக்கமுறையைக்கொண்டதாகவும் அமைந்திருக்கிறது.''

இவ்வாறு சுன்னகம் கிறிஸ்தவதேவ ஆச்சிரமத்தின் ஆண்டு விழாவில் ஆச்சிரம ஆலயத்தில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் ஆராதனையில் அருளுரை நிகழ்த்திய அருட்திரு. எஸ். எஸ். அருளம்பலம் அடிகளார் குறிப்பிட்டார்.

அருட்திரு. சூரியகுமார் அடிகளாரின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் ஆராதனையில் அருட்திரு. எஸ். எஸ். அருளம்பலம் அடிகளார் தொடர்ந்து அருளுரை நிகழ்த்துகையில் ''ஆச்சிரம வாழ்கை உலகப் பிரகாரமான வாழ்க்கைக்கு முற்றும் முரணானதாகும். ஆத்மீகத்துறையிலே தான் ஆச்சிரமத்தின் முன்னேற்றம் தங்கியுள்ளது.'' என்று கூறினர்.

பருத்தித்துறை ஆஸ்பத்திரியில்

# இரத்தத்தைப் பாதுகாக்க குளிர்சாதனப்பெட்டி!

[புலோலி]

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தத்தைச் சேமித்து வைப்பதற்கென சுகாதாரத் திணைக்களம் 50 போத்தல் இரத்தத்தைக் கொள்ளக் கூடிய குளிர்சாதனப் பெட்டியொன்றை வழங்கியுள்ளது

இதுவரைகாலமும் இவ் வைத்தியசாலையில் இரத்தத்தைச் சேமித்து வைப்பதற்கான வசதிகள் இல்லாமையினால் இப்பகுதி நேயாளர்கள் பாதிப்படைந்து வந்தனர். தற்போது இக் குளிர்சாதனப் பெட்டி கிடைத்திருப்பது இப்பகுதி நோயாளர்களுக்குப் பெரும் வரப்பிரசாதம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் வைத்தியசாலை இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு பருத்தித்துறை மாவட்டவைத்திய அதிகாரி டாக்டர் கே, மயிலேறும் பெருமாள் அறிவித்துள்ளார். இரத்ததானம் செய்பவர்கள் இரத்தத்தை இழப்பதனால் புதிய இரத்தத்தை உண்டு பண்ணிக் கொள்வது மன்றி இரத்தம் உண்டு பண்ணும் உறுப்புகளுக்கும் அப்பியாசத்தையும் அளிப்பதனால் உடலைப் பொதுவாக சீர் படுத்தி கொள்ளமுடியும் இரத்ததானம் செய்ய விரும்புவோர்க்கு வைத்திய பரிசோதனை செய்யப்படும் அப்போது நோய் ஏதாவது காணப்பட்டால் அதற்குத் தகுந்த சிகிச்சை பெற்றுக் கொள்ளவும் வழியேற்படும் என்றும்ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்றது.

## மாவை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பெற உள்ளது

உற்சவத்திற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகஸ்தர் பிரமஸ்ரீ. அ. துரைச்சாமி ஐயர் மேற் கொண்டுள்ளார்.

## இன்றைய—

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வரவேற்கத்தக்க செய்தி கிட்டும்

கும்பம்: வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் முயற்சி செய்வீர்கள் புதிய தொழில் துறை ஒன்றில் வாய்ப்புக் கிடைக்கும் முன்னேற்றம் உண்டு.

மீனம்: வணிகர்கள் அதிக முதலீட்டை தவிர்த்துக் கொள்ளவும் வீணான சிந்தனையால் வேதனைப் படுவீர்கள் சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படும்.

திருமலை
வே. ரவீந்திரன்

**உடன் தேவை**

**இனிப்புவகை தயாரிப்பவர்**

சுருவில் [KAYTS] இனிப்பு தயாரிக்கும் நிறுவனத்திற்கு அனுபவமும், பொறுப்புமுள்ள
''தலைமை இனிப்பு வகைத் தயாரிப்பாளர்''
ஒருவர் உடனடியாகத் தேவை.
CANDY, BUTTER SCOTCH, ORANGE
இனிப்பு வகைகள் தயாரிப்பதில் அனுபவம் முக்கியம்.
கவர்ச்சிகரமான ஊதியமும், சலுகைகளும் வழங்கப்படும்.
1984 09-01இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

**ROOTS INTERNATIONAL**
59, 4th CROSS STREET JAFFNA;
[1272]

## யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்

கைதடி.

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் — 1984 கொண்டாட்டத்தை முன்னிட்டு இச்சங்கம் வினாவிடைப் போட்டியொன்றை நடத்துகின்றது. உடலூனமுற்றோர் குறிப்பாகப் பார்வையற்றோர், அவர்களின் கல்வி, வெள்ளைப்பிரம்பு ஆகியவை தொடர்பாக 25 வினாக்கள் வினவப்படும்.

சாதாரண பொதுமக்களும் விழிப்புலனற்றோரின் நிலைமை, அவர்களின் வெள்ளைப்பிரம்புப்பற்றி தெரிந்து கொள்ளச் செய்யும் நோக்கத்துடனேயே சகல பாடசாலை மாணவர்களையும் தனிப்பட்ட மாணவர்களையும் இப்போட்டியில் பங்கு பற்றும்படி கேட்டுக் கொள்கிறார்கள்.

**முதற் பரிசு 300 ரூபா**
**இரண்டாம் பரிசு 200 ரூபா**
**மூன்றும் பரிசு 100 ரூபா**

### நிபந்தனைகள்:—

1. பங்குகொள்ள விரும்புவோர் விணப்பத்திரத்தை கோரி இரண்டு 60 சத முத்திரைகளுடன் கடிதம் ஒன்றினை **செயலாளர், யாழ். விழிப்புலனற்றோர் சங்கம், கைதடி.** என்னும் முகவரிக்கு அனுப்பி விணப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விணப்பத்திரங்கள் யாவும் 20-9-1984 திகதிக்குப் பிந்தாமல் செயலாளரின் முகவரிக்கே திருப்பி அனுப்பப்பட வேண்டும்.
3. பங்குகொள்பவர் 12—20 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. பரிசு பெற்றவர்களுக்கு அது பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும்.
   **பரிசுகள் யாவும் 13-10-1984 அன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ள சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் 1984 கொண்டாட்டத்தின் போது வழங்கப்படும்.**
5. யாழ் விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் போட்டியில் பங்கு பற்ற தகுதியற்றவர்கள்.
6. நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. (1237)

# தமிழ்நாட்டில் எதிர்கட்சிகள் இன்று மறியல் போராட்டம்!

[சென்னை]

தமிழ் நாட்டில் எதிர்க்கட்சிகள் இன்று நடத்தவுள்ள மறியல் போராட்டத்தை அடுத்து அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதனையடுத்து தமிழ்நாட்டில் இன்று விடுமுறைதினமாக தமிழ்நாடு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் இன்று பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், அரச அலுவலகங்கள், கடைகள், ஹோட்டல்கள் மூடப்பட்டிருக்கும் என்றும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

பஸ், ரயில் சேவைகளும் இன்று ரத்துச் செய்யப்பட்டுள்ளன. மறியல் போராட்டம் இடம்பெறுவதற்கு முன்னதாகவே நேற்றுத் தமிழ்நாட்டில் 1,000க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தி மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

## ஆளுநர் - எம். ஜி. ஆர். சந்திப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று ஆளுநர் திரு. எஸ். எம். குரானாவை ராஜ்பவனில் சந்தித்து சுமார் ஒரு மணித்தியாலம் கலந்துரையாடினார்.

அத்தியாவசிய சேவைகள் வழமைபோல் இன்று நடைபெறும் என்று முதலமைச்சர் திரு எம். ஜி ராமச்சந்திரன் தெரிவித்தார். [வெ]

## முஸ்லிம் பெரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலாச்சார நிலையமொன்றை உருவாக்குவதில் வெற்றி கண்ட சேர். ரஸீக் பரீத் தமது இறுதிக் காலங்களில் 'ஓர்க்கிட்' மலர்ச் செய்கையிலும் மிகுந்த விருப்பம் கொண்டிருந்தார்.

இவரது மறைவு குறித்து ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உட்பட அரசியல், சமூக ஸ்தாபனங்களைச் சேர்ந்த பலர் அனுதாபம் தெரிவித்துள்ளனர். இவரது மரணச் சடங்குகள் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றன

### கூட்டணி அனுதாபம்

சேர், ரஸீக் பரீத்தின் மறைவுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணியும் அனுதாபம் தெரிவித்துள்ளது [கி]

## பிள்ளைகளை விடுவிக்க....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது சிலமணிநேரம் வாகனப் போக்குவரத்துக்குத்தடை ஏற்பட்டிருந்தது.

ஏராளமான சுலோக அட்டைகளையும் அன்னையர்கள் கைகளில் தாங்கியிருந்தனர்.

கண்டி வீதியால்சென்ற ஊர்வலம் காலை 10 மணியளவில் யாழ். செயலகத்தை வந்து அடைந்தது

### மகஜர் கொடுத்தனர்

அன்னையர் முன்னணி ஏற்கனவே திட்டமிட்டபடி ஐவர் கொண்ட குழு அரசாங்க அதிபரைச் சந்தித்து. முறையிட்டு மகஜர் கையளிப்பதாக இருந்தது.

ஆனால் ஊர்வலமாகச் சென்ற அன்னையர்களில் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு செயலகத்தையும், செயலக முன்றலையும், முன் வீதியையும், சுற்றுப்புறங்களையும் சூழ்ந்து முற்றுகையிடுவது போல் நின்று கொண்டார்கள்.

இவர்களில் ஒருபகுதியினர், அன்னையர் முன்னணி செயலாளர்களுடன் சேர்ந்து அரச அதிபரின் பணிமனைக்குள் சென்றார்கள்.

''ஐயா கைதுசெய்யப்பட்ட எங்கள் பிள்ளைகளை விடுதலை செய்து எங்களிடம் ஒப்படைப்பீர்களா ஐயா!'' என்று அவலக்குரல் எழுப்பினர்கள் அன்னையர்கள்.

அரசாங்க அதிபர் அமைதியாக இருக்கும்படி அன்னையர்களை கேட்டபோது ''எங்களுக்கு ஒருமுடிவு சொல்லுங்கோ' என்று ஏகோபித்து குரல் எழுப்பினார்கள்.

அரச அதிபர் தொலைபேசி மூலம் தேசிய பாதுகாப்பு அமைச்சருடனும், பாதுகாப்பு உயரதிகாரிகளுடனும் தொடர்பு கொண்ட முயற்சிகள் பயனளிக்காமல் போகவே எதுவிதத்திலும் இன்று பிற்பகல் 6 மணிக்குள் தீர்ந்து முடிவு சொல்லுகின்றேன்'' என்றார்.

'இனிமேலாவது எங்கள் பிள்ளைகளை இராணுவத்தினர் கைதுசெய்ய வேண்டாம் என்று உயர் அதிகாரிகளுக்குத் தெரிவிக்குமாறு தாய்மார்கள் யாழ். அரசஅதிபரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அரசாங்க அதிபர் முன்னர் தெரிவித்த உறுதிமொழியையடுத்து தாய்மார்கள் செயலகத்தை விட்டு அமைதியாகக் கலைந்து சென்றனர். (மா)

## கைது செய்யப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ள முகாமுக்குத் தான் இன்று விஜயம் செய்து. விடுதலை செய்யக் கூடியவர்களை விரைவில் விடுதலை செய்யுமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுவிக்கவுள்ளதாகவும் யாழ். அரச அதிபரிடம் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு முகாமில் சகல வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

### யாழ். அரச அதிபர் 'லலித்' சந்திப்பு

அண்மையில் கைதுசெய்யப்பட்டு முகாமில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் விடுதலை தொடர்பாக யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தை எதிர்வரும் திங்கட்கிழமை தமது அலுவலகத்தில் வந்து தம்மைச் சந்திக் மாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி கேட்டுள்ளார். [வெ]

## இயக்கச்சியில் 8 பேர் கைது; ஒருவர் தற்கொலை

(கொழும்பு)

இயக்கச்சியில் நேற்று முன் தினம் இரவு சுமார் 10 மணியளவில் ஆயுதப்படையினர் மேற்கொண்ட ஒரு தேடுதல் வேட்டையில் 8 இளைஞர்கள் வளைத்துப் பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்களில் ஒருவர் உடனடியாகவே நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டதாகவும் ஏனைய 7 பேரும் ஆனையிறவு தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## அன்னையரின் மற்றுமொரு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பல நூற்றுக்கணக்கில் மாணவர்கள் கைது செய்யப்படுவதால் பாடசாலைகளை இம் மாதம் 27ம் திகதி திறக்க வேண்டாமென்று 'அன்னையர் முன்னணி' யாழ். அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாகக் கல்வி உயர் அதிகாரிகளையும் சந்திக்க 'அன்னையர் முன்னணியினர் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## அவசரகாலம் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இந்நீடிப்புக்கான பிரேரணை நேற்று அதிகாலை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுவாக்குகளினால் நிறைவேறியது.

இப்பிரேரணைக்கு ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 7 வாக்குகளும் கிடைத்தன.

அரசியல் அமைப்பின் 9வது திருத்தச் சட்டமூலமும் நேற்று ஏகமனதாக சபையில் நிறைவேறியது. (கி)

## கிளிநொச்சி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கிராமிய தொழில் துறை அமைச்சின் அனுசரணையுடன் மரவேலை தொழில் கூடம் மேசன் பயிற்சி கூடம், கைத்தெறி நெசவு நிலையம் ஆகியனவும் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளன. இத்துடன் மாட்டுப்பண்ணையொன்றும் அமைக்கப்படவிருக்கிறது. (கி]

## அப்பாவிச்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படையினர் கோரினர். அவர்களைப் பதிவு செய்துவிட்டுத் திருப்பித் தருவதாகக் கூறியதையடுத்தே ஆயுதப் படையினரிடம் பிள்ளைகளைப் பெற்றோர் ஒப்படைத்தனர். ஆனால் பின்பு அப்பிள்ளைகள் அனைவரும் அவ்வாறு ஒப்படைக்கப்படவில்லை. இத்தைய சுமார் ஐந்நூறு சிறுவர்கள் எங்கோ கொண்டு போகப்பட்டனர். இவ்வாறு கொண்டுபோகப்பட்டவர்களில் வயது குறைந்தோரும், ஊனமுற்றவர்களும் அடங்குவர் ஆகஸ்ட் 21-ம் திகதி மீண்டும் அநேகர் நெல்லியடியில் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர். இவர்களின் பெற்றோர் எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாத நிலையில் உள்ளனர். 48 மணித்தியாலயத்தில் கைது செய்யப்பட்டவர்களைப் பற்றிய தகவல் தருவது என்ற நடைமுறை இருந்தும் இவர்கள் எங்கு உள்ளார்கள்? எங்கு எடுத்துச்செல்லப்பட்டிருக்கின்றார்கள் என்று பெற்றோருக்குத் தெரிவிக்கப்படவில்லை

இதன் பிரதிகள் எதிர்க்கட்சித்தலைவர், சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கைக்கிளை, சர்வதேச மன்னிப்புச்சபை ஜெனிவா, அணிசேரா நாடுகள் தலைவர், பொதுநலநாடுகள் தலைவர், ஐக்கிய நாடுகள் சபைத்தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (மா)

## இந்திய விமானம் கடத்தப்பட்டது

புதுடில்லி ஆக. 24

இந்திய விமானமொன்றை பன்னிரண்டு சீக்கியத் தீவிரவாதிகள் லாகூருக்கு கடத்திச் சென்றுள்ளனர்.

விமானத்தை லாகூரில் தரையிறக்கிய கடத்தல்காரர்கள் விமானத்தை அங்கிருந்து வேறொரு இடத்திற்கு கடத்திச் சென்றுள்ளனர்.

## ஆந்திரா ஆளுநர் ராஜினமா

(ஹைதரபாத்)

ஆந்திரா பிரதேச ஆளுநர் திரு. ராம்லால் நேற்றுத் தமது பதவியை ராஜினமாச் செய்தார். இவர் ஆந்திரா முன்னாள் முதலமைச்சர் திரு. என் டி ராமராவை அண்மையில் பதவி நீக்கம் செய்திருந்தது தெரிந்ததே. (வெ)

## தற்கொலை

[கிளிநொச்சி]

சகோதரியுடன் தகராறு கொண்ட இளம் யுவதி ஒருவர் தந்தையின் கண்டிப்பைப் பொறுக்காது நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

பரந்தன் பாம்புக் கமத்தில் வசித்துவந்த அப்புத்துரை நாகநந்தினி [22-வயது] என்பவரே மரணமானவராவார்'

## தவழ்ந்து

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளின் கலியாணப் பேச்சுக்களும் இடம்பெறத் தவறவில்லை.

சில ஓய்வூதியகாரர்கள், இளமையில் தாங்கள் வேலைபார்த்த இடங்களில் ஏற்பட்ட சுவையான அனுபவங்களைப் வயோதிப நண்பர்களுடன் பரிமாறிக் கொண்டிருந்தார்கள்.

சுதுமலையைச் சேர்ந்த இராமலிங்கம் என்பவர், ஓய்வூதியம் பெறச் செல்லும்போது குடையொன்றை தமக்குப்பின்னால் நின்றவரிடம் கொடுத்துவிட்டு சென்றார். அந்தக்குடை தவறுதலாக கைமாறிவிட்டது. ஓய்வூதியத்துடன் திரும்பிவந்தவர் தமது குடை தவறிவிட்டதைக்கண்டு போர்க்கோலம் கொண்டார். இருவரும் மைதானத்தில் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்தனர். ஓய்வூதியக் காரர்கள் இதனை ரசித்துக்கொண்டு நின்றனர்.

தபாலகங்களில் ஓய்வூதியம் எடுக்கும்போது பாதுகாப்பு அளிப்பவர்களுக்கு தேநீர்வழங்குவதற்கு பென்சன்காரர் 50 சதமோ ஒருரூபாவோ வழங்குவதுண்டென்றும் அந்தத் தலையிடி இங்கில்லை என்றும் வயோதிபர் ஒருவர் தெரிவித்தார்.

சொந்தஊரில்தபால்நிலையங்களில் பென்சன் எடுத்துவந்தவர்களுக்கு கார்ஏறி, பஸ் ஏறி பட்டணம்வந்து பென்சனை [illegible]ப்பது கஷ்டமாக இருந்தாலும் வயோதிப காலத்தில், நல்ல பொழுதுபோக்கு என்று வேட்டியும், தோளில் சால்வை மட்டும், அணிந்திருந்த வயோதிபர் ஒருவர் சொன்னர்.

நேற்று நண்பகல் 12 மணி வரை ஓய்வூதியம் வழங்கப்பட்டது. இம்மாதம் 31ம் தேதி வரை ஓய்வூதியம் வழங்கப்படும். (க)


## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா சின்னையா

உரும்பிராய் கிழக்கைச் (கரந்தன்) சேர்ந்த திருமதி இராசம்மா சின்னையா 23ம் திகதி சிவபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், காலம்சென்ற திருமதி அன்னலட்சுமி பொன்னையா. திருமதி சரஸ்வதி வைத்திலிங்கம், இராமநாதன் (System Anlyst and Auditors, Singer Co U. S. A) இராமச்சந்திரன் (Engineer, Taylorwoodrow Const Ltd, U. K) அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை (25-8-84) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று இளங்காட்டு மயானத்தில் தகனக்கிரிகைக்காக எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

(1430)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா பிளாக்

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்ஷனியர் செல்லத்துரை Samuel பிளாக் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஹட்ஸன் பரமசாமியின் அன்பு மகளும், றெஜீனு, றிச்சர்ட், விக்டோரியா, எலிஸபெத் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸாம் கிறிஸ்டியன், சரா இம்மானுவேல் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) கிங்ஸ்லி ராஜசூரியர் (இன்ஷுரன்ஸ், Bahrain) ஆகியோரின் அன்பு மாமியாரும், றுபேஷ், (வாணர்ஸ்) மோகன் (கனடா), மறீனு (இந்தியன் எயர்லைன்ஸ்) பற்றீஷியா (யாழ். பல்கலைக்கழகம்) றேஹான் (St Patricks) ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார். பூதவுடல் 25-8-84 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் சங்கானை தேவாலய வீதியிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து சங்கானை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(1427)


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 24126